**கடன் திட்டங்கள்**

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் 1987ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யும் அதிகார சபையினால், (REPPIA) 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டங்களை இழப்பீடுகளுக்கான அலுவலகமானது இலங்கை வங்கியுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது.

**திட்டங்களின் வகைகள்**

**1.இன்னலுக்குள்ளான நபர்களுக்கான சுய தொழிற் கடன் திட்டம்**

இத் திட்டம் 2010 இல் இன்னலுக்குள்ளான நபர்களுக்கான வாழ்வாதாரத்திற்கான வழிகளை ஏற்படுத்துவதற்கும் அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் உதவுவதறகுமாக ஆரம்பிக்கப்பட்டது.

**2. சமூகத்துடன் மீள்-இணைக்கப்பட்ட பயிலுனர்களுக்கான சுயதொழிற் கடன் திட்டம்**

இத் திட்டம் 2012 இல் அப்போதைய புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீமைப்பு அமைச்சின் பரிந்துரையின் பேரில், புனர்வாழ்வு திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சமூகத்தில் மீண்டும் இணைக்கப்பட்ட சுமார் 12,000 சமூகத்துடன் மீளிணைக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்குச் சுயதொழில் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான கடன் வசதிகளை வழங்கியது.

**3. வீட்டுக்கடன் திட்டம்**

இத் திட்டமானது இன்னலுக்குள்ளான நபர்களுக்கு வீட்டினை அமைப்பதற்கு அல்லது புனரமைப்பதற்கான நிதி உதவியினை வழங்குவதற்காக 2010ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தின் அடிப்படையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**பொருத்தமான அளவுகோல்கள்**

- அதிகபட்சக் கடன் தொகை - ரூ. 250,000.00
- வட்டி வீதம் - 4% வருடத்துக்கு
- மீள்-கொடுப்பனவுக்கான காலம் - ஒவ்வொரு விடயத்தினதும் அடிப்படையில் அதிக பட்சம் 7 வருடங்கள்
- சலுகைக் காலம் - திட்டத்தின் தேவை அடிப்படையில் 1 வருடம் வரை.
- பிணைப்பொறுப்பு- வங்கியினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய இரண்டு உத்தரவாதமளிப்பவர்கள்

**<u>விண்ணப்பத்தின் செயன்முறை</u>**

- மாவட்டங்களில் உள்ள இழப்பீட்டு அலுவலகம், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் விண்ணப்பங்களைப் பெறலாம். விண்ணப்பத்தை இங்கே பதிவிறக்கம் செய்யலாம்.

- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரால் சான்றளிக்கப்பட்டு பிரதேச செயலாளர் மூலம் இழப்பீட்டு அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

- சுயதொழிற் கடன்களுக்கான விண்ணப்பங்கள் சாத்தியப்பாட்டினை மதிப்பிடுவதற்காக முன்மொழியப்பட்ட சுயதொழிற் திட்டம் தொடர்பான அனைத்து விவரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

- சுயதொழிற் கடன் திட்டத்தின் கீழ் கடன்பெற விரும்புகின்ற சுயதொழிற் திட்டத்திற்கான தகுதி மற்றும் சாத்தியத்தன்மை என்பவற்றைக் கண்டறியும் முகமாக, இழப்பீடுகளுக்கான அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளையின் அதிகாரிகள் ஆகியோர் விண்ணப்பதாரிக்கான நேர்முகப் பரீட்சையினை மேற்கொள்வர்.

- குழு கடனுக்கு ஒப்புதல் அளிக்க முடிவு செய்கின்றவிடத்து, விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை மற்றும் மீளச் செலுத்தப்பட வேண்டிய காலம் ஆகியவை தீர்மானிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கான குழுவால் இலங்கை வங்கிக்கு பரிந்துரைக்கப்படும்.

- வழங்கப்படுகின்ற பிணைப்பொறுப்பை ஏற்றுக்கொள்வது குறித்து திருப்தி அடைந்தவுடன் வங்கி கடனை வழங்கும்.

**<u>முன்னேற்றத்தை அறிவதற்கான கண்காணிப்பு</u>**

இழப்பீட்டு அலுவலகத்திலிருந்து கள அலுவலர்கள் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, தேவைக்கேற்ப பயனாளிகளுக்கு ஆலோசனை வழங்குவார்கள்.

**2010 முதல் 2020 இறுதி வரை வழங்கப்பட்ட கடன்கள்**

| தொடர் இல. | மாவட்டம் | **சுய தொழில் – இன்னலுக்குள்ளான நபர்கள்** | | **சுய தொழில் – சமூகத்துடன் மீள்-இணைக்கப்பட்ட நபர்கள்** | | **வீட்டுக் கடன்கள் – இன்னலுக்குள்ளான நபர்கள்** | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ) | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ) | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ) |
| 1 | யாழ்ப்பாணம் | 1,882 | 324,655,000.00 | 711 | 142,336,000.00 | 136 | 33,400,000.00 |
| 2 | கிளிநொச்சி | 918 | 131,925,000.00 | 541 | 90,684,000.00 | 144 | 31,200,000.00 |
| 3 | முல்லைத்தீவு | 351 | 61,270,000.00 | 594 | 113,860,000.00 | 133 | 32,800,000.00 |
| 4 | வவுனியா | 358 | 51,244,000.00 | 346 | 55,675,000.00 | 44 | 10,550,000.00 |
| 5 | மன்னார் | 352 | 61,765,000.00 | 336 | 62,400,000.00 | 154 | 32,700,000.00 |
| 6 | அம்பாறை | 1,005 | 65,149,000.00 | 29 | 5,375,000.00 | 32 | 7,950,000.00 |
| 7 | திருகோணமலை | 258 | 41,630,000.00 | 163 | 35,500,000.00 | 56 | 13,700,000.00 |
| 8 | மட்டக்களப்பு | 607 | 97,872,000.00 | 145 | 26,770,000.00 | 67 | 16,400,000.00 |
| 9 | ஏனைய மாவட்டங்கள் | 17 | 3,575,000.00 | 5 | 1,150,000.00 | 4 | 1,000,000.00 |
| **மொத்தம்** | | 5,748 | 839,085,000.00 | 2,870 | 533,750,000.00 | 770 | 179,700,000.00 |

சகல பிரிவுகளுக்கும் வழங்கப்பட்ட கடன்களின மொத்த எண்ணிக்கை – 9,654

கடன்களாக வழங்கப்பட்ட மொத்த தொகை - ரூ. 1.6 பில்லியன்